## இயற்கணிதம் (Algebra) - பயிற்சிக்கணக்குகள் - தநாஅபு - பயிற்சி 3.3.5-10

5. ஒரு முழு எண்ணின் மூன்று மடங்குடன் 9 -ஐக் கூட்ட 45 கிடைக்கிறது எனில் அவ்வெண்களைக் காண்க.

கண்டுபிடிக்க வேண்டிய எண்ணை $x$ எனக் கொள்க

முழு எண் $x$ -ன் மூன்று மடங்கு $3x$ ஆகும்.

$3x + 9 = 45$

$3x = 45 - 9 = 36$

$x = \frac{36}{3} = 12$

ஒரு முழு எண்ணின் மூன்று மடங்குடன் 9 -ஐக் கூட்ட 45 கிடைக்கிறது எனில் அந்த எண் 12 ஆகும்.

6. இரண்டு அடுத்தடுத்த ஒற்றைப்படை எண்களின் கூடுதல் 200 எனில் அவ்வெண்களைக் காண்க.

அடுத்தடுத்த இரண்டு ஒற்றைப்படை எண்கள் $= x,\ x + 2$

$x + x + 2 = 200$

$2x + 2 = 200$

$2x = 200 - 2 = 198$

$x = \frac{198}{2} = \frac{\cancel{198}^{99}}{\cancel{2}_{1}}$

$x = 99$

$x + 2 = 99 + 2 = 101$

அந்த எண்கள் = 99 மற்றும் 101 ஆகும்.

7. வாடகை மகிழுந்தின் (Taxi) வாடகைக் கட்டணமாக முதல் 5 கி.மீ தொலைவிற்குக் குறைந்தபட்சக் கட்டணமாக ₹100 -ம் 5 கி.மீ க்கு மிகும் தொலைவிற்கு கி.மீ க்கு ₹16 எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒருவர் தனது பயணத்திற்காக வழங்கிய மொத்தத் தொகை ₹740 எனில் அவர் பயணித்த தொலைவைக் காண்க.

முதல் 5 கி.மீ க்கான குறைந்தபட்ச கட்டணம் = ₹100

பயணித்த தொலைவு = $x$

5 கி.மீ மிகும் தொலைவிற்கு 1 கி.மீ உள்ள கட்டணம் = 16(x - 5)

அவர் பயணத்திற்காக வழங்கிய மொத்த தொகை = ₹740

$100 + 16(x - 5) = 740$

$16(x - 5) = 740 - 100 = 640$

$x - 5 = \frac{640}{16} = \frac{\cancel{640}^{40}}{\cancel{16}_{1}} = 40$

$x = 40 + 5 = 45$

அவர் பயணித்த தொலைவு = 45 கி.மீ ஆகும்.

8. 3, 6, 9, 12,. . . என்னும் எண் அமைப்பின் பொது வடிவம்.

i) $n$ ii) $2n$ iii) $3n$ ✓ iv) $4n$

3, 6, 9, 12, . . . ஆகியவை 3 -ன் மடங்காகும். எனவே இவை $3n$ ஆகும்.

9. $3x + 5 = x + 9$ என்பதன் தீர்வு

i) 2 ✓ ii) 3 iii) 5 iv) 4

$3x + 5 = x + 9$

$3x - x = 9 - 5$

$2x = 4$

$x = \frac{4}{2} = 2$

10. $y + 1 = 0$ என்னும் சமன்பாடு $y$ -ன் எம்மதிப்பிற்கு உண்மையாகும்?

i) 0 ii) -1 ✓ iii) 1 iv) -2

$y + 1 = 0$

$y = 0 - 1 = -1$

Information Rights & Disclaimers

Sum & solution prepared on Friday 29th July, 2022 :: 14:40 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.

https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally well permitted. However, doing so for commercial purpose(s) is/are strictly prohibited.